# ஆட்டிப் படைத்த
# அடால்ஃப் ஹிட்லர்



டி. எஸ். பத்மநாபன்

கூடுதலாக 'கென்னடி படுகொலையின் அவிழாத முடிச்சுக்கள்'

# ஆட்டிப் படைத்த அடால்ஃப் ஹிட்லர்

(கூடுதலாக '**கென்னடி படுகொலையின் அவிழாத முடிச்சுக்கள்**')


## டி. எஸ். பத்மநாபன்



*நிலா புக்ஸ்*

*முகவரி*

**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: nila@nilacharal.com**

நூல் தலைப்பு : **ஆட்டிப் படைத்த அடால்ஃப் ஹிட்லர்**

இணைப்பு நூல் : **கென்னடி படுகொலை - இன்னும் அவிழாத முடிச்சுக்கள்**

நூலாசிரியர் : டி. எஸ். பத்மநாபன்

பதிப்பாசிரியர் : நிலா

மொழி : தமிழ்

விலை : 1.49 USD

முதல் பிரசுரம் : மே 2006

பதிப்பகம் : நிலா புக்**ஸ்**

காப்புரிமை : ஆசிரியருக்கும் பதிப்பகத்துக்கும்

மொத்த பக்கங்கள் : 46 + 12

புத்தக வடிவமைப்பு : ம. மங்கள ஜோதி

*"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்கு தமிழ் இலக்கியங்களை படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்கு தமிழ் இலக்கிய பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே '**நிலா புக்ஸ்**' -ன் இலட்சியம்"*





# அணிந்துரை

எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்து அவைகளை உயிர்பெற்ற உணர்ச்சிகளாக மாற்றுவது என்பது சுலபமான விடயம் அல்ல. ஒவ்வொரு எழுத்தாளனும் தன்னுடைய படைப்புகள் ஒவ்வொன்றும் கருக்கொண்டு பின்பு படைப்புகளாக வெளிவரும் வரையிலும் எதிர்கொள்வது ஒரு பிரசவ வேதனையே.

அத்தனை சிக்கல்களுக்கிடையில் வெளிவரும் படைப்புகளைப் படித்த மாத்திரத்தில் அதன் தரத்தைப் பற்றி விமர்சித்து விடுவதில் நாம் வல்லவர்களாக இருக்கின்றோம்.

எழுத்து வகைகளில் கட்டுரை எழுவதே சிரமம் என்று எண்ணுபவன் நான். ஏனென்கிறீர்களா? அநேகமாக வடிக்கப்படும் கட்டுரைகள் தத்துவப் பாங்கைக் கொண்டிருக்கும். தத்துவங்கள் ஒருவகை மனோநிலையிலிருப்பவர்களுக்குத்தான் கேட்கும்போது இனிக்கும். மற்றையோருக்கு அலுப்புத் தட்டிவிடும். எனவே அதைத் திறம்பட எழுத வேண்டுமானால் அதைச் சுவையோடு கூற வேண்டும்.

சரித்திரப் பிரசித்தி பெற்றவர்களைப் பற்றி எழுதுவதென்பது மிகவும் சிரமமானது. ஏனெனில் வாசகர்கள் இவர்களைப் பற்றி ஓரளவிற்குத் தெரிந்து வைத்திருப்பார்கள். பின்பு அதைப் படிக்கும் போது தங்களின் மனதில் அவரைப் பற்றி இருக்கும் அபிப்பிராயத்தோடு அதை ஒப்பிட்டு நோக்குவார்கள்.

இந்த நூலின் படைப்பு நண்பர் டி.எஸ். பத்மநாபன் அவர்களின் திறமைக்கு ஒரு மகுடம். அவர் இந்த நூலில் எடுத்துக் கொண்ட கருவின் மூலம் 'உலக சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகித்த ஒரு பாத்திரத்தின் வரலாற்றுச் சான்றுகள்'. ஹிட்லர் எனும் அந்த தனிமனிதனுடைய தாக்கம் மனித சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பல.

அப்படிப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய உண்மைப் பாத்திரத்தின் வரலாற்றுச் சான்றுகளை இத்தனை அழகாக ஒரு நூலில் வடிப்பதற்கு திரு. பத்மநாபன் எத்தனை ஆராய்ச்சி செய்திருப்பார் என்று என்னால் ஊகிக்க முடிகின்றது. இது எமது இளம் தலைமுறையினால் உள்வாங்கப்பட வேண்டிய ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. இனப்பாகுபாடு, மதப்பாகுபாடு, நிறப்பாகுபாடு என மனிதர்களின் அடிமனதில் புரையோடிப் போயிருக்கும் புற்றுநோய் சரியாக கவனிக்கப்படாதவிடத்து, எப்படி வளர்ந்து முழு உலகையே அழிக்கக் கூடிய வல்லமை பெற்ற சரித்திர நிகழ்வாக மாறுகின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

சாதாரணமாக வரலாற்று நூல் ஒரு சரித்திரக் குறிப்பு புத்தகத்தைப் போன்ற பாணியில் அமைந்திருப்பதைக் காணலாம், ஆனால் திரு. பத்மநாபனோ ஹிட்லர் எனும் அந்த சர்வாதிகாரியின் வளர்ச்சியை, அந்த வெறுப்புணர்ச்சி ஹிட்லரின் மனதில் வளர்வதற்கு ஏதுவாயிருந்த காரணிகளை ஆராய்வது போன்ற பாணியில் சிறு சிறு குணாதிசயங்களைக் கூட குறிப்பிட்டு எழுதியிருப்பது மிகவும் சுவையாக உள்ளது.

பத்தொன்பது அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூலின் ஆரம்பமாக ஹிட்லரின் இளமைக்காலம் அரும்புகின்றது. அதைத் தொடர்ந்து ராணுவ அனுபவம், தேசியப் புரட்சி, அரசியல் எழுச்சி என்னும் பல பாதைகளினூடே அழைத்துச் சென்று யூதத் துவேஷத்தினுள் பிரவேசித்து அதன்மூலம் வீழ்ச்சியடையும் இறுதி நேரம் வரையும் நம்மை அழைத்துச் செல்கின்றார் நூலாசிரியர் டி.எஸ்.பத்மநாபன்.

ஆனால் இந்த சர்வாதிகாரத்தின் உறைவிடமான ஹிட்லர் எனும் மனிதனின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அள்ளியெடுத்து அழகுறப் படைத்திருக்கின்றார்.

இவரது அற்புதமான எழுத்துத் திறமை பல இடங்களில் மிளிர்கின்றது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

''இளமைக்காலம்'' எனும் அத்தியாயத்தில் ''இந்தச் சரித்திரக் களங்கம் பிறந்த நாள் 20, ஏப்ரல் 1889.'' என்று கூறுவதன் மூலம், ஹிட்லரின் மீது எழுத்தாளருக்கு இருக்கும் அபிப்பிராயத்தை அம்பலப்படுத்துகிறார்.

''சாம்ராஜ்யக் கனவுகள்'' எனும் அத்தியாயத்தில் ''ஹிட்லர் போட்ட கணக்கு சரியாக இருந்ததால், அவரது நம்பிக்கை மேலும் வலுப்பெற்றது.'' எனும் வாக்கியத்தின் மூலம் ஆசிரியர் ஹிட்லரின் அரசியல் பின்னணியில் ஆழ்ந்த கவனம் எடுத்திருப்பது புலப்படுகின்றது.

''இறுதி நேரம்'' எனும் இறுதி அத்தியாயத்தில் எப்படி தன்னுடைய நூலை முடிவுக்குக் கொண்டு வருகின்றார் பாருங்கள்: ''ஐரோப்பாவையே இருண்ட கண்டமாக்கிய ஹிட்லர், எதிர்கால அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக விளங்கினார். அவரது ஆட்சி, சர்வாதிகாரத்தால் விளையக்கூடிய கொடிய விளைவுகளையும், இனப் பகைமை ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக்களையும் விளக்கியதோடு குடியாட்சியின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. இது கொஞ்சம் அதிகமான விலை கொடுத்து வாங்கிய பாடம்தான். ஆனாலும் உலகம் பகைமை மறந்து, சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் இயங்க காலம் சொல்லித் தந்த அரிய பாடம். ''

இத்தகைய அழகிய நூலை ஆக்கிய திரு டி.எஸ்.பத்மநாபன் வாசகர்களுக்கு மற்றுமோர் இலவச விருந்தளிக்கின்றார்.

மிகவும் அழகாக ஹிட்லரின் வளர்ச்சியையும் அதைத் தொடர்ந்த அவரது வீழ்ச்சியையும், விளக்கும் இந்த நூலின் மற்றொரு சிறப்பம்சம், இலவசமான இணைப்புப் போன்ற **"கென்னடி படுகொலை; இன்னும் அவிழாத முடிச்சுக்கள்"** என்னும் மற்றொரு அரசியல் ஆய்வுக் கட்டுரையாகும்.

கென்னடியின் மறைவுக்குப் பின்னால் பல மர்ம முடிச்சுக்கள் இருப்பதாக பல தரப்புகளிலிருந்து சொல்லப்பட்டிருந்தாலும் இந்தக் கட்டுரையின் சிறப்பம்சமாக, அனைத்துத் தர வாதங்களையும் திரு டி.எஸ்.பத்மநாபன் தொகுத்து நமக்கு வழங்கியிருக்கின்றார். இத்தகைய கட்டுரைகள் எமக்கு ஒரு பரந்த கண்ணோட்டத்தை வளர்க்க உதவுகின்றன. சரித்திர உண்மைகள் பல ஆங்காங்கே சின்னச் சின்ன சமாச்சாரங்களாக சிதைந்து கிடக்கின்றன. அவைகளை திரு. பத்மநாபனைப் போன்றவர்கள் அரிய முயற்சி எடுத்து வாசகர்கள் பார்வைக்குக் கொண்டுவந்துள்ளது ஒரு இலக்கியப்பணியே.

திரு டி.எஸ்.பத்மநாபனின் ஆக்கங்களை நிலாச்சாரலில் மிகவும் ஆர்வத்துடன் தொடர்ந்து படிப்பவர்களில் நானும் ஒருவன். நண்பரது இலக்கியப் பயணத்தில் அவர் எத்தனையோ மைல் கற்களைக் கடந்திருக்கின்றார். இந்த மைல் கல் கூட அவரது அனுபவப் புத்தகத்தில் ஆழப்பதிந்த அத்தியாயமாகிவிட்டது.

இந்த நூல் விளைந்த நிலத்திலிருந்து இன்னும் பல அரிய பல நூல்கள் வெளிவரும் எனும் ஆழ்ந்த நம்பிக்கையோடு, தமிழ் இலக்கிய உலகிற்கு நண்பர் திரு டி.எஸ்.பத்மநாபன் அவர்களுடைய சேவை தொடர வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்

**சக்தி சக்திதாசன்**
**லண்டன்**



# 1. இளமைக்காலம்



அடால்ஃப் ஹிட்லர் - உலக சரித்திரத்தின் துடைக்கமுடியாத களங்கம் - ஆறுமில்லியன் யூதர்கள் உட்பட கிட்டத்தட்ட 11 மில்லியன் மக்களைக் கொன்று குவித்த அரக்கன்.

1000 ஆண்டுகள் நிலைத்து நிற்கும் ஜெர்மன் சாம்ராஜ்யத்தை அமைக்கக் கனவு கண்டு அது தன் கண் முன்னாலேயெ தவிடுபொடியானதைக் கண்டவர். ஜெர்மனியை அழிவின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றவர்.

இந்தச் சரித்திரக் களங்கம் பிறந்த நாள் 20, ஏப்ரல் 1889. ஜெர்மன் எல்லைக்கு அருகாமையிலிருந்த ஆஸ்திரிய கிராமத்தில் பிறந்தார். அவரின் பெற்றோரார்கள் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

ஹிட்லர் ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போது படிப்பில் வெகு கெட்டி. நண்பர்களிடையே அவர் மிகவும் பிரபலம்- அவருக்குள் தலைமை தாங்கும் திறமையை அப்போதே புகழ்வார்கள். அவருக்குக் கடவுள் நம்பிக்கையும் அந்த நேரத்தில் அதிகமாக இருந்தது. கூட இருந்தவர்கள் அச்சிறுவன் சன்னியாசி ஆகக் கூடும் என்று கூட நினைத்தார்கள்.

ஆனால் ஆரம்பப் பள்ளியைத் தாண்டி செகண்டரி பள்ளியில் சேர்ந்து படித்தபோது அவரால் மற்ற மாணவர்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவரை எப்படியாவது படிப்பில் முன்னிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று முயற்சி செய்த அவரது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரது முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. மற்ற மாணவர்களுக்கு அவர் மேல் இருந்த ஈர்ப்பும் குறைந்தது.

அவருக்கு சண்டையிடுவது போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் ஏற்பட்டது. போயர்(Boer) சண்டையை சக மாணவர்களுக்கு நடித்துக்காட்டுவார். போயர் மக்களை ஆங்கிலேயரது முகாமிலிருந்து காப்பாற்றும் படைத்தளபதியாக வேடமிட்டு நடிப்பது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

செகண்டரி பள்ளியில் அவருக்குப் பிடித்த ஒரே ஆசிரியர் லியோபோல்ட் போட்ஷ் (Leopold Potsch). அவரது சரித்திர ஆசிரியரான அவர் ஒரு ஜெர்மன் தேசியவாதி. போட்ஷ் (Potsch)ஹிட்லருக்கும் மற்ற மாணவர்களுக்கும் ஜெர்மனி 1870, 71ம் ஆண்டுகளில் ஃபிரான்சிடம் போரிட்டு அடைந்த வெற்றி பற்றியும் அதற்கு ஆஸ்திரியா ஆதரவு தராதது பற்றியும் கூறுவார்.

ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் முதல் வேந்தரான (Chancellor) பிஸ்மார்க்தான் ஹிட்லரது

இளவயது ஹீரோ. ஹிட்லருக்குப் பிடித்த மற்றொரு விஷயம் ஓவியம் வரைவது. தன் மகன் தன்னைப்போல அரசாங்கப் பணியில் அமரவேண்டும் என்று எதிர்பார்த்த அவரது தந்தைக்கு

இது தெரிந்ததும் அவர் கோபத்தின் உச்சியை அடைந்தார். இவர்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடுகள் அதிகமாக, தந்தை 1903ம் ஆண்டு மிகுந்த மனவருத்ததுடன் மறைந்தார்.

ஹிட்லருக்குப் படிப்பின் மேல் ஈடுபாடு குறைந்தது. பதினைந்தாவது வயதில் தனது செகண்டரி படிப்பைக்கூட முடிக்காத நிலையில் பள்ளியை விட்டு வெளியேறினார். அந்த

மகிழ்ச்சியைக் கொண்டாட முதன் முதலாகக் குடிக்கத் துவங்கினார். ஆனால் அதனால் ஏற்பட்ட அனுபவம் இனி குடிக்கக்கூடாது என்று உறுதி எடுத்துக்கொள்ளத் தூண்டியது.

18வது வயதில் அவருக்கு அப்பாவின் சொத்து வந்துசேர வியன்னாவிற்குச் சென்றார், ஓவியராக வேண்டும் என்ற கனவுடன். ஆனால் வியன்னா கலைக்கல்லூரியில் இடம் கிட்டவில்லை. கட்டிடக்கலைக் கல்லூரியில் சேரவேண்டும் என்ற அவரது விருப்பமும் அவர் பள்ளி இறுதிப் படிப்பை முடிக்காத காரணத்தால் ஈடேறவில்லை. இந்தத் தோல்விகள் அவருக்கு மிகவும் அவமானத்தைத் தந்தன. அவரது அன்னை கிளாரா ஹிட்லரிடம் தனக்கு ஓவியக்கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டதாகப் பொய் சொல்லி வியன்னாவிலேயே தங்கினார்.

1907ல் அவரது தாயார் புற்றுநோயால் இறந்தார். தாயின் மரணம் ஹிட்லரை மிகவும் பாதித்தது. அவருக்குத் அவரது தாயார் என்றால் உயிர். அவரது புகைப்படத்தை எப்போதும் தன்னுடனே வைத்திருப்பார். 1945ல் இறக்கும்போதுகூட அவர் தனது தாயாரின் புகைப்படத்தைப் பத்திரமாக உடன்வைத்திருந்தார் என்று கூறுகிறார்கள்.

அவருக்கு அப்பாவின் பென்ஷன் தொகை வந்து கொண்டிருந்ததால் பணக் கஷ்டம் ஏதுமில்லாமல், படிப்பது, வியன்னா மியூசியங்களுக்குச் செல்வது, ஓவியம் வரைவது என்று பொழுது போக்கினார்.

# 2. ராணுவ அனுபவம்



1909ல் அவர் ராணுவசேவைக்குத் தன்னை பதிந்திருக்கவேண்டும். ஆனால் ஆஸ்திரிய ராணுவத்தில் சேர அவருக்கு விருப்பமில்லை. ஆஸ்திரியா என்றாலே அவருக்கு அப்படி ஒரு வெறுப்பு.

ராணுவ அதிகாரிகள் நான்கு வருடம் கழித்து அவரது இருப்பிடத்தைக் கண்டு பிடித்துவிட்டார்கள். கட்டாய ராணுவ சேவையில் சேர்ப்பதற்காக அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டபோது 'இவன் ரொம்பப் பலவீனமானவன். இவனால் ஆயுதங்களைத் தூக்கக் கூடமுடியாது. அதனால் ராணுவத்திற்கு லாயக்கில்லை' என்று ஒதுக்கிவிட்டார்கள்.

முதலாவது உலகப்போர் ஹிட்லருக்கு ஒரு புதிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அது, ஜெர்மனி மற்ற ஐரோப்பிய நாடுகளை விட உயர்ந்தது என்று உலகுக்கு எடுத்துக் காட்ட ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பம் என்று அவர் கருதினார். ஆஸ்திரியாவுக்காகப் போரிட விருப்பமில்லாமல் ஜெர்மன் ராணுவத்தில் சேர முயன்றார். சண்டைக் காலத்தில் மருத்துவ சோதனை விதிகள் தளர்த்தப்பட்டதால் அவரால் ஜெர்மன் படையில் சேர முடிந்தது.

ஹிட்லருக்கு ராணுவத்தில் இருப்பது மிகவும் பிடித்தது. இதுதான் ஜெர்மனியின் வெற்றிக்காகப் பாடுபடும் ஒரு குழுவில் பங்கேற்பதற்கு அவருக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் என எண்ணினார். அதோடு அவருக்கு சண்டையிடுவதில் ஒருவித மனக் கிளர்ச்சி இருந்தது.

அவர் தனது பணியில் கவனமாக இருந்தாலும் ஆபத்தான பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தயங்கியதில்லை. அதனால் அவரது மேலதிகாரிகளுக்கு அவரைப் பிடித்தது. அவரது கூட இருந்தவர்கள் ஹிட்லரை வினோதமாகப் பார்த்தார்கள். அப்போதே ஹிட்லர் திடீர் திடீரென்று பிரசங்கம் செய்வாராம். அவரது பேச்சுக்களெல்லாம் யூதர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் எதிரானதாக இருக்கும். யூதர்களும் கம்யூனிஸ்டுகளும்தான் போர் முயற்சிகளுக்குத் தடையாக இருக்கிறார்கள் என்பது அவருக்குள் ஊறிப்போன ஒரு கருத்து.

ஹிட்லருக்கு செய்திகளை ராணுவக் காரியாலயங்களிலிருந்து போர்முனைக்கு எடுத்துச் செல்லவேண்டிய ஆபத்தான வேலை. ஒரே நாளில் எட்டு ராணுவக் காரியாலங்களிலிருந்து செய்தி கொண்டு சென்றவர்களில் மூன்று பேர் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

ராணுவக் கடிதங்களை போர்முனைக்கு எடுத்துச் செல்லும் பணியை சிறப்பாக செய்தமைக்காகப் பாராட்டுப் பெற்ற ஹிட்லர், முதலாவது உலக யுத்தத்தில் தனது சேவைக்காக ஐந்து மெடல்களைப் பெற்றார். அதைத்தவிர அப்பொழுது பெருமை வாய்ந்த விருது என்று கருதப்பட்ட Iron cross விருதையும் பெற்றார்.

இவ்வளவு பாராட்டுப் பத்திரங்கள் பெற்றாலும் அவரால் ராணுவத்தில் 'கார்பொரல்' பதவி வரை மட்டுமே எட்ட முடிந்தது. அவரது கிறுக்குத்தனமான போக்கினால் சக வீரர்கள் அவரை மதிக்கமாட்டார்கள் என்று ராணுவத் தலைமை எண்ணியதே இதற்குக் காரணம்.

அக்டோபர் 1918ல் பிரிட்டிஷ் படை குளோரின் வாயுத் தாக்குதல் நடத்தியதில் ஹிட்லர் தற்காலிகமாகத் தன் கண் பார்வையை இழந்தார். ஒரு ராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவரது பார்வை சிறிது சிறிதாகத் திரும்பியது.

அவர் மருத்துவ மனையில் இருந்த நேரத்தில் ஜெர்மன் படை சரணடைந்தது. ஹிட்லர் இதனால் மனம் பாதிக்கப்பட்டார். திடீரென்று பெரிதாகக் குரலெடுத்து அழுவார். பலநேரங்களில் ஒன்றும் பேசாமல் மருத்துவமனைச் சுவரை வெறித்து நோக்கியவாறு அமர்ந்திருப்பார். மறுபடியும் தான் தோற்றுவிட்டதாக அவருக்கு ஒரு எண்ணம்.